g) The Company will also provide e-voting facility during the AGM. The procedure for remote e-voting and e-voting during the AGM is mentioned in the AGM Notice. The members attending the AGM through VC facility who have not already exercised their vote by remote e-voting will be able to exercise their vote during the AGM.
h) The facility for e-voting during the meeting is available only to those members participating in the meeting through VC facility.
i) The members who have exercised their vote by remote e-voting prior to the AGM may also attend the AGM but shall not be entitled to exercise their vote at the AGM again.
j) For any grievances connected with facility for e-voting, Members may contact Mr. M Lakshmi Kanth Joshi, Company Secretary and Compliance Officer by sending an email to lkjoshi@lgb.co.in.
k) In case of any queries, please refer to the Frequently Asked Questions (FAQs) and e-voting user manual for shareholders available at www.evotingindia.com or contact toll free no: 1800 22 55 33 or send a request to helpdesk.evoting@cdslindia.com.

The Board of Directors of the Company has appointed Mr. M D Selvaraj, (FCS: 960 / CP No. 411) Partner, MDS & Associates LLP, Practicing Company Secretaries as the Scrutinizer for conducting the process of remote e-voting and e-voting during the AGM in a fair and transparent manner.

The Notice of the AGM alongwith instructions for e-voting is available on CDSL's website at www.evotingindia.com.

Notice is also hereby given that pursuant to Section 91 of the Act and Regulation 42 of the SEBI Listing Regulations, the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from **Thursday, August 20, 2026 to Wednesday, August 26, 2026 (both days inclusive)** to determine the names of members who will be entitled to receive the **final dividend of Rs.22/-** per equity share for the financial year 2025-26.

For L.G Balakrishnan & Bros Limited
Sd/-
M Lakshmi Kanth Joshi
Senior GM (Legal) & Company Secretary

Date : 31.07.2026
Place : Coimbatore

WINRO COMMERCIAL (INDIA) LIMITED

CIN: L51226MH1983PLC165499
Regd. Office: 209/210, Arcadia Building, 2nd Floor, 195, Nariman Point, Mumbai - 400 021. **Telephone:** 022-40198600.
Email Id: winro.investor@gcvl.in, **Website:** www.winrocommercial.com

REMINDER FOR SPECIAL WINDOW FOR TRANSFER AND DEMATERIALISATION OF PHYSICAL SECURITIES OF WINRO COMMERCIAL (INDIA) LIMITED

This is in continuation of the earlier intimations and pursuant to SEBI circular no. HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026 dated January 30, 2026, the shareholders of **Winro Commercial (India) Limited** are hereby reminded that a Special Window is open for a period of One (1) year from **February 5, 2026 to February 4, 2027** for transfer and dematerialisation ("demat") of physical securities which were sold/purchased prior to April 01, 2019.

This facility is available only for such transfer requests where transfer deeds have been executed prior to April 1, 2019 including Fresh Lodgement or transfer requests earlier rejected/returned/not attended to due to deficiency in the documents/process/or otherwise.

All securities transferred under this Special Window shall be mandatorily credited to the transferee's demat account only and shall be subject to a lock-in period of one (1) year from the date of registration of transfer. During the lock-in period, such securities shall not be transferred, pledged, lien-marked, or otherwise encumbered.

Shareholders who are in possession of original physical security certificates along with transfer deeds duly executed prior to April 01, 2019 are encouraged to avail themselves of this opportunity by submitting the requisite documents within the stipulated period to the Company's Registrar and Transfer Agent i.e. MUFG Intime India Private Limited at C-101, 1st Floor, 247 Park, Lal Bahadur Shastri Marg, Vikhroli West, Mumbai- 400083, Tel No. +91 8108118484, email: **investor.helpdesk@in.mpms.mufg.com**

The Company's website **www.winrocommercial.com**, has been updated with the circular detailing the opening of this special window.

For Winro Commercial (India) Limited
Ritesh Zaveri
Whole Time Director
DIN: 00054741

Place: Mumbai
Date : 30.07.2026

SARASWATI COMMERCIAL (INDIA) LIMITED

CIN: L51900MH1983PLC166685
Regd. Office: 209/210, Arcadia Building, 2nd Floor, 195, Nariman Point, Mumbai - 400 021 **Telephone:** 022-40198600
Email Id: saraswati.investor@gcvl.in, **Website:** www.saraswaticommercial.com

REMINDER FOR SPECIAL WINDOW FOR TRANSFER AND DEMATERIALISATION OF PHYSICAL SECURITIES OF SARASWATI COMMERCIAL (INDIA) LIMITED

This is in continuation of the earlier intimations and pursuant to SEBI circular no HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026 dated January 30, 2026, the shareholders of Saraswati Commercial (India) Limited are hereby reminded that a Special Window is open for a period of One (1) year from **February 5, 2026 to February 4, 2027** for transfer and dematerialisation ("demat") of physical securities which were sold/purchased prior to April 01, 2019.

This facility is available only for such transfer requests where transfer deeds have been executed prior to April 1, 2019 including Fresh Lodgement or transfer requests earlier rejected/returned/not attended to due to deficiency in the documents/process/or otherwise.

All securities transferred under this Special Window shall be mandatorily credited to the transferee's demat account only and shall be subject to a lock-in period of one (1) year from the date of registration of transfer. During the lock-in period, such securities shall not be transferred, pledged, lien-marked, or otherwise encumbered.

Shareholders who are in possession of original physical security certificates along with transfer deeds duly executed prior to April 01, 2019 are encouraged to avail themselves of this opportunity by submitting the requisite documents within the stipulated period to the Company's Registrar and Transfer Agent i.e. MUFG Intime India Private Limited at C-101, 1st Floor, 247 Park, Lal Bahadur Shastri Marg, Vikhroli West, Mumbai- 400083, Tel No.: +91 8108118484, email: **investor.helpdesk@in.mpms.mufg.com**

The Company's website **www.saraswaticommercial.com**, has been updated with the circular detailing the opening of this special window.

For Saraswati Commercial (India) Limited
Avani Sanghavi
Company Secretary & Compliance Officer
Membership No.: A29188

Place: Mumbai
Date : 30.07.2026

Jullundur Motor Agency (Delhi) Limited

CIN: L35999HR1996PLC033943
Regd. Off: 458-1/16, Sohna Road, Opp New Court, Gurugram-122001, Haryana, India
Email ID: info@jmaindia.com; Website: www.jmaindia.com;
Ph. No.: 0124-4233868-70

NOTICE OF THE 77TH ANNUAL GENERAL MEETING, RECORD DATE AND E-VOTING INFORMATION

NOTICE IS HEREBY GIVEN THAT the Seventy Seventh (77th) Annual General Meeting ("AGM") of the members of Jullundur Motor Agency (Delhi) Limited will be held on Tuesday, 25th August, 2026 at 11:00 A.M. through Video Conferencing ("VC") / Other Audio Visual Means ("OAVM") for which purpose the registered office of the Company situated at 458-1/16, Sohna Road, Opposite New Court, Gurugram- 122001, Haryana, INDIA, shall be deemed as the venue for the Meeting and the proceedings of AGM shall be deemed to have taken place thereat, to transact the Businesses, as set out in the Notice of AGM. Members attending the meeting through VC/ OAVM shall be counted for the purpose of Quorum under Section 103 of the Companies Act, 2013 ("the Act").

77th Annual Report containing Notice of AGM, Financial Statements (Standalone & Consolidated), Reports of Auditors and Boards thereon, and other documents along with instruction(s) for E-Voting and Joining of AGM through Video Conferencing are being sent only by electronic mode to those Members whose E-mail ID is registered with the Company/ Depositories. The abovementioned documents are also available on and can be downloaded from the Company's website i.e. www.jmaindia.com, website of National Stock Exchange at www.nseindia.com and website of NSDL at https://www.evoting.nsdl.com. Further, in accordance with the Regulation 36(1)(b) of the SEBI Listing Regulations, the Company has initiated sending a letter to the Shareholders whose e-mail addresses are not registered with the Company/RTA/DPs providing a web-link from where the Annual Report can be accessed on the website of the Company.

Members may attend and participate in the AGM only through VC/OAVM facility, as indicated in the Notice of the AGM. Please note that there will be no provision for attending and participating in person at the AGM of the Company.

Please also note that, as per SEBI Master Circulars dated 07th May 2024, dividend payments to physical shareholders will only be processed through electronic mode. This applies to shareholders whose PAN, KYC details, choice of Nomination, and bank account information are updated with the Registrar and Share Transfer Agent (RTA). If these details are not updated, the dividend will not be paid until the necessary information is provided. Shareholders are advised to ensure their records are complete to facilitate timely payment of dividends.

In case you have not registered your email address and Bank account details with the Company/ RTA/ Depository, please follow below instructions to register/update your e-mail address and bank account details for obtaining the Notice of AGM, login details for e-voting, Annual Report for FY 2025-26 and Dividend electronically.

For shares held in Physical form	Members holding shares in physical form, who have not registered/ updated their e-mail addresses, PAN, KYC, Bank and Choice of Nomination with the Company are requested to register / update the same by submitting following documents/details to RTA of the Company i.e. MAS Services Limited at T-34 2nd Floor, Okhla Industrial Area, Phase-II, New Delhi 110020, email: investor@masserv.com 1. E-mail, Mobile No. and PAN, using form ISR-1 2. Choice of Nomination in Form No. SH-13 or a declaration to 'Opt out' in Form ISR-3; 3. Contact details including Postal address with PIN code (in case of change of address). 4. Bank Account details including Bank name and branch, Bank account number, MICR Code and IFS code (using form ISR-1). 5. Specimen signature (using form ISR-2), and 6. Any cancellation or change in nomination shall be provided in Form No. SH-14 Shareholders can download the above mentioned forms from the 'Download' section available on the Company's website under Investor head and is also available on the website of the RTA at https://www.masserv.com/downloads.asp. Please update the same on or before 18th August, 2026.
For shares held in Demat Form	Shareholders holding shares in dematerialized mode are requested to register / update their PAN, Nomination Details, Contact details (Address with PIN, Mobile number and Email address), Bank account details and Specimen signature with the relevant Depository Participant. Please update the same on or before 18th August, 2026

Book Closure and Record Date: NOTICE is also hereby given that pursuant to Section 91 of the Act read with Rule 10 of the Companies (Management & Administration) Rules, 2014 and Regulation 42 of SEBI Listing Regulations, 2015, the Company has fixed Tuesday, 18th August, 2026 as Record date for the purpose of determining entitlement of members for final dividend of ₹ 3/- per equity share of ₹ 2/- (Two Rupees Only) each fully paid-up of the Company (including special dividend of ₹ 1/- per equity share) (i.e. 150% including 50% as special dividend) for the Financial Year 2025-26 if declared. Also, the Register of Members and Share Transfer Books of the Company shall remain close from Wednesday, 19th August 2026 to Tuesday, 25th August, 2026 (both days inclusive) for taking record of the Members of the Company for the purpose of 77th Annual General Meeting.

E-voting: Notice is hereby given that in compliance with the provisions of Section 108 of the Act and rules made thereunder read with Regulation 44 of SEBI Listing Regulations, 2015, the Company has offered e-voting facility to its members, holding shares either in physical form or in dematerialized form, as on the Record date i.e. Tuesday, 18th August, 2026, for transacting all the businesses / resolutions set forth in the Notice of AGM electronically.

(A) Remote e-voting: The remote e-voting period commences on Thursday, 20th August, 2026 at 09:00 A.M. and ends on Monday, 24th August, 2026 at 05:00 P.M. No e-voting shall be allowed beyond the said date and time. The remote e-voting module shall be disabled by NSDL for voting thereafter.

(B) E-voting at AGM: The facility for voting through e-voting shall also be made available at the AGM to those members who have not cast their votes by remote e-voting and are attending the AGM through VC/OAVM. The members who have cast their vote by remote e-voting prior to the AGM may also attend the AGM but shall not be entitled to cast their vote again.

Once the vote on a resolution is cast by the member, the member shall not be allowed to change it subsequently.

M/s. Vijay K. Singhal & Associates, Company Secretaries, (Shri Vijay K. Singhal, Proprietor) has been appointed as Scrutinizer for the e-voting process. The detailed procedure for remote e-voting is contained in the email sent with the Notice of the AGM and also available on the website of the Company i.e. www.jmaindia.com. Any person who becomes a member of the Company after dispatch of the Notice of the Meeting and holding shares as on the Record date i.e. Tuesday, 18th August, 2026 may generate the Login ID and password by following the procedure as provided in the Notice of the AGM. Members, who need assistance before or during the AGM, can contact NSDL on evoting@nsdl.com / 022-4886 7000 and our Registrar and Share Transfer Agent on investor@masserv.com / 011-26387281-82-83

For and on behalf of
Jullundur Motor Agency (Delhi) Limited
Sd/-
Ramesh Pal
Company Secretary
(M. No.: F13349)

Place: Gurugram
Date: 31st July, 2026

ஒருவேளை சாப்பாடு- மழை, வெயிலில் அவதி:

சங்கிலியால் கட்டப்பட்டு 15 ஆண்டுகளாக சித்ரவதைக்குள்ளான கோவை வாலிபர்

23 ஆண்டுகளுக்கு பின் மீட்கப்பட்டவர் பற்றி திடுக்கிடும் தகவல்

கோவை, ஜூலை.31—

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ராமமூர்த்தி. இவரது மனைவி சுந்தரி. இந்த தம்பதியினருக்கு 2 மகன்கள் இருந்தனர்.

திடீர் மாயம்

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் பிழைப்புக்காக குடும்பத்துடன் கோவை வந்தனர். கோவை சுவுண்டம்பாளையம் எருக்கம்பெனி பகுதியில் தங்கியிருந்து வேலை பார்த்தனர். கடந்த 2003—ம் ஆண்டு சகோதரனுடன் ஏற்பட்ட தகராறில் மூத்த மகன் பிரகாசம் வீட்டை விட்டு வெளியே சென்றவர் அதன்பிறகு வீடு திரும்பவில்லை. அப்போது பிரகாசத்துக்கு வயது 16.

பிரகாசத்தை அவரது குடும்பத்தினரும் பல்வேறு இடங்களில் தேடிப்பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்கிடையே பிரகாசத்தின் தந்தை ராமமூர்த்தி உடல்நலக்குறைவால் மரணம் அடைந்தார். அதன்பின் சுந்தரி, தனது 2—வது மகனுடன் நீலாம்பூர் பகுதிக்கு இடம்பெயர்ந்து அங்கு கூலிவேலை செய்து பிழைப்பு நடத்தினார். அதேசமயம் தனது மூத்த மகன் பிரகாசம் மீண்டும் வர வேண்டும் என சுந்தரி இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தார்.

சுந்தரியின் பிரார்த்தனை வீண் போகவில்லை. 23 ஆண்டுகளுக்கு பின் தற்போது பிரகாசம், தாயார் சுந்தரியுடன் சேர்ந்துள்ளார். பஞ்சாப்

காலில் சங்கிலி கட்டப்பட்ட நிலையில் சித்ரவதை அனுபவித்த பிரகாசம்.

மாநில அதிகாரிகள் அவரை அங்கிருந்து மீட்டு விசாரித்தபோது அவர் கோவையில் இருந்து வந்த விவரத்தை தெரிவித்துள்ளார். அதன் மூலம் பிரகாசத்தின் தாயார் சுந்தரி என்பது தெரியவந்துள்ளது.

பிரகாசத்தை தாயாருடன் அனுப்பி வைக்க பஞ்சாப் மாநில அதிகாரிகள் சில ஆவணங்களை கேட்க சுந்தரி, கோவை மாவட்ட கலெக்டர் பவன்குமாரின் உதவியை நாடினார். கலெக்டரும் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு பிரகாசம் தொடர்பான பழைய ஆவணங்கள் கிடைக்க ஏற்பாடு செய்தார். அந்த சான்றிதழ்களுடன் பஞ்சாப் மாநிலம் சென்ற சுந்தரி, நேற்றுமுன்தினம் தனது மூத்த மகன் பிரகாசை மீட்டார். 23 ஆண்டுகளுக்கு பின் சந்தித்த தாயும், மகனும் கட்டி அணைத்து கண்ணீர் வடித்தனர். இதையடுத்து தனது மகனை அழைத்துக் கொண்டு சுந்தரி கோவை திரும்பினார்.

தாயாருடன் கோவை வந்து சேர்ந்த பிரகாசம்.

பஞ்சாப்பில் பிரகாசம் அனுபவித்த கொடுமைகள் அனைவரையும் திடுக்கிடச் செய்துள்ளது. 23 ஆண்டுகளுக்கு முன்பு வீட்டில் இருந்து கோபித்துக் கொண்டு வெளியேறிய பிரகாசம் எங்கெல்லாமோ சுற்றித்திரிந்துள்ளார். பின்னர் லாரிகளில் ஏறி பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் சென்றுள்ளார். அங்கு ஒருவர் வேலைவாங்கி தருவதாக ஏமாற்றி அவரை கொத்தடிமையாக விற்றுள்ளார்.

பஞ்சாப்— பாகிஸ்தான் எல்லை பகுதியில் பிரகாசம் கொத்தடிமையாக வேலை பார்த்துள்ளார். மாட்டுத் தொழுவத்தில் அவரை வேலை வாங்கியுள்ளனர். ஒரு வேளை மட்டுமே சாப்பாடு கொடுத்துள்ளனர். வேலை முடிந்தபிறகு அவர் தப்பிச் செல்லாமல் இருக்க கை, கால்களை இரும்பு சங்கிலியால் கட்டிப்போட்டுள்ளனர். மழை, வெயிலிலும் அந்த மாட்டுத்தொழுவத்திலேயே காலத்தை கழித்துள்ளார். சரியாக வேலை செய்யாவிட்டால் அடித்து, உதைத்தும் உள்ளனர்.

இப்படி 15 ஆண்டுகள் தொடர்ந்து சித்ரவதைக்குள்ளாகியுள்ளார். பிறகு யாரோ ஒருவர் வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் பரப்பி உள்ளார். அதன்பேரில் தன்னார்வலர்கள் இணைந்து பிரகாசத்தை கடந்த 2022—ம் ஆண்டு மீட்டுள்ளனர். கடந்த 4 ஆண்டுகளாக அவரை உறவினர்களுடன் சேர்க்க பஞ்சாப் மாநில அதிகாரிகளும், தன்னார்வலர்களும் போராடியிருக்கிறார்கள். இதன் பலனாக தற்போது பிரகாசத்தை அவரது தாயாருடன் சேர்த்து வைத்துள்ளனர். இதனால் பிரகாசத்தின் தாயார் மட்டுமல்லாமல் அதிகாரிகளும், தன்னார்வலர்களும் கூட மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தாயார் உருக்கம்

பஞ்சாப்பில் இருந்து மீட்டு வர நடவடிக்கை மேற்கொண்ட கோவை மாவட்ட கலெக்டர் பவன்குமாரை, சுந்தரியும், அவரது மகன் பிரகாசமும் நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்க உள்ளனர்.

இதுதொடர்பாக சுந்தரி நிருபர்களிடம் கூறியதாவது:—

என் மகனை காணவில்லை என்று வருடக்கணக்கில் தேடித்தேடி அழுது கொண்டிருந்தேன். நான் வணங்கிய கடவுள் எனக்கு அவனை காப்பாற்றிக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவன் காலில் சங்கிலியை கட்டி கொடுமைப்படுத்தப்பட்ட காட்சிகளை பார்த்தபோது என்னால் தாங்கிட முடியவில்லை, தூக்கமே வரவில்லை. இப்போது அவனை 23 ஆண்டுகள் கழித்து மீட்டது மகிழ்ச்சியாக உள்ளது.

என் கணவர் இறக்கும் வரை இவனை காணவில்லை என்று வருந்திக் கொண்டிருந்தார். ஆனால் இவன் உயிரோடு இருப்பான் என்பதை அவர் நம்பினார். பிரகாசம் என்றால் சூரியன். சூரியன் அழியாது என்று சொல்லிக் கொண்டே இருப்பார். நானும் நம்பியிருந்தேன். அவன் உயிரோடு இருக்கிறான் என்று தெரிந்த தருணத்தில் கடவுள் தான் அவனை காப்பாற்றியிருக்கிறார் என்று புரிந்து கொண்டேன்.

23 வருடத்துக்கு முன்பு பார்த்தது போல தான் இப்போதும் இருக்கிறான். அவன் தமிழ் பேசுவானோ, இல்லையோ என்று பயந்தேன். நன்றாகவே என்னிடம் தமிழ் பேசினான். இனிமேல் என்னை விட்டு எங்கேயும் போகமாட்டேன் என்று சொல்லி விட்டான். என் மகன் ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்கிறான். அவனை இனிமேல் நன்றாக பார்த்துக் கொள்வது தான் என்னுடைய ஒரே வேலை.

இவ்வாறு அவர் கூறினார்.



ஊட்டி தொகுதி கிராம மக்களை சந்தித்து போஜராஜன் எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்தபோது எடுத்தபடம்.

அஜ்ஜூர் கிராம பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை

ஊட்டி எம்.எல்.ஏ. போஜராஜன் உறுதி

ஊட்டி, ஜூலை.31—

நீலகிரி மாவட்டம் ஊட்டி சட்டமன்ற தொகுதியில் பா.ஜனதா வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற போஜராஜன் எம்.எல்.ஏ., தன்னை தேர்வு செய்த வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்து வருகிறார். இதன் ஒரு பகுதியாக ஊட்டி அருகே உள்ள கக்குச்சி, அஜ்ஜூர், கவிங்கனட்டி, தொட்டன்னி சுற்றுப்புற கிராம மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். அப்போது அவர் பேசியதாவது:—

என் மீது அன்பு வைத்து, என்னை எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்தமைக்காக நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். ஹெத்தையம்மன், ஹிரியோடையப்பர் அருளால் கிடைக்கப்பெற்ற இந்த வாய்ப்பை தொகுதி மக்களுக்காக மட்டுமில்லாது, நீலகிரி மாவட்ட மக்களின் நலன்களுக்காக பணியாற்றுவேன்.

அடிப்படை பிரச்சினை

இதற்காக எனது மனமார்ந்த நன்றி. ஊட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க சிறப்பு கவனம் செலுத்துவேன்.

அஜ்ஜூர் கிராம பிரச்சினை குறித்து கூடுதல் கவனம் செலுத்தி அந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்பேன். ஊட்டி நகரில் ஒய்.பி.ஏ. அருகில் எனது சட்டமன்ற அலுவலகம் உள்ளது.

இ—சேவை மையம்

இ—சேவை மையமும் ஓரிரு நாட்களில் செயல்பட உள்ளது. உங்களது பல்வேறு பிரச்சினைகளை நேரிலோ அல்லது எனது அலுவலகத்திலோ தெரிவிக்கலாம். அதுதொடர்பாக நடவடிக்கை எடுத்து, முடிந்த வரை உங்களது கோரிக்கைகளை தீர்த்து வைக்க பணியாற்றுவேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

வரவேற்பு

முன்னதாக ஊர்த்தலைவர் அஜ்ஜா கவுடர் தலைமையில் போஜராஜன் எம்.எல்.ஏ.வுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் பா.ஜனதா மாவட்ட தலைவர் தருமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

டவுன்ஹால் பகுதியில்

நாளை மின்தடை

கோவை, ஜூலை.31—

உக்கடம் துணை மின் நிலையத்தில் நாளை (1—ந்தேதி) பராமரிப்பு பணிகள் நடக்கிறது. இதையொட்டி அங்கிருந்து மின் வினியோகம் பெறும் பகுதிகளுக்கு நாளை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் தடை செய்யப்பட உள்ளது.

வெரைட்டிஹால் ரோடு பகுதி, டவுன் ஹால் பகுதி, தியாகி குமரன் மார்க்கெட், ஒப்பணக்கார வீதி, செல்வபுரம், கெம்பட்டி காலனி பகுதிகள், கரும்புக்கடை, ஆத்துப்பாலம், உக்கடம், சுங்கம் பைபாஸ் ரோடு, சண்முகா நகர், ஆல்வின் நகர், இந்திரா நகர், பாரிநகர் மற்றும் டாக்டர் முனிசாமி நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள், ஸ்டேட் பாங்கி ரோடு, கலெக்டர் அலுவலகம், ரெயில்நிலையம் பகுதிகள், அரசு மருத்துவமனை, லாரிப்பேட்டை, உக்கடம் பகுதி ஆகிய இடங்களில் மின் நிறுத்தம் செய்யப்பட உள்ளதாக மின்வினியோக செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

சிங்காநல்லூரில்

நண்பனின் தந்தையை கொன்ற 17 வயது சிறுவன் கைது

கோவை, ஜூலை.31—

சிங்காநல்லூர் அருகே உள்ள நீலிக்கோணம்பாளையத்தை சேர்ந்தவர் மணிகண்டன் (வயது 50). இவர் பெயிண்டிங் தொழில் செய்து வந்தார். இவருக்கு 2 மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். இதில் இவரது 2—வது மகனும், அதே பகுதியை சேர்ந்த 17 வயது சிறுவனும் நண்பர்களாக பழகி வந்துள்ளனர்.

கண்டிப்பு

17 வயது சிறுவன் 10—ம் வகுப்புடன் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு கிடைக்கும் வேலைக்கு சென்று வந்துள்ளார். இதற்கிடையில் அந்த சிறுவன் தனது மகனுடன் பழகுவதை மணிகண்டன் விரும்பவில்லை என கூறப்படுகிறது. இதனால் அந்த சிறுவனை அவர் கண்டித்து வந்துள்ளார். ஆனாலும் அந்த சிறுவன் மணிகண்டனின் மகனுடன் தொடர்ந்து பழகி வந்துள்ளார். சம்பவத்தன்று மணிகண்டனின் மகனுக்கு சிறுவன் செல்போனில் தொடர்பு கொண்டுள்ளார். இதுகுறித்து மணிகண்டனுக்கு தகவல் தெரியவந்துள்ளது.

வாக்குவாதம்

நேற்று மணிகண்டன் வீட்டில் இருந்து வெளியே புறப்பட்டு சென்றுள்ளார். அப்போது வழியில் அந்த சிறுவனை பார்த்துள்ளார். உடனே மணிகண்டன், தனது மகனுடன் பேச வேண்டாம் என்று கூறியும் ஏன் தொடர்ந்து தொடர்பு கொள்கிறாய் என்று கூறி சத்தம் போட்டுள்ளார். இதில் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அப்போது ஆத்திரமடைந்த சிறுவன் மணிகண்டனை தள்ளிவிட்டுள்ளார். இதில் கீழே விழுந்த அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. மேலும் அவரை சிறுவன் கல்லால் தாக்கினார். இதில் அவர் பரிதாபமாக இறந்தார். இந்த சம்பவம் குறித்து சிங்காநல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். நண்பனின் தந்தையை கொன்றதாக 17 வயது சிறுவனை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

2 மாதங்களாக போலீசில் சிக்காமல் டிமிக்கி:

மாணவி வீட்டில் குண்டுவீசிய ரவுடி மீண்டும் அட்டகாசம்

மொபட்டில் பின்தொடர்ந்து வந்து மிரட்டல்

வடவள்ளி, ஜூலை.31—

கோவை தொண்டாமுத்தூர் அருகே உள்ள கலிக்கநாயக்கன்பாளையம் பகுதியை சேர்ந்த இளம்பெண் ஒருவர், கோவை கல்லூரியில் படித்தபோது தோழியின் உறவினரான சென்னை விருகம்பாக்கத்தை சேர்ந்த கார்த்திக் என்ற மாரியப்பனுடன் பழகி வந்தார்.

பெட்ரோல் குண்டுவீச்சு

பின்னர் அவருக்கு கார்த்திக் மீது தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு போலீஸ் நிலையங்களில் 31—க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பது தெரியவந்தது. இதனால் இளம்பெண்—கார்த்திக் இடையே காதல் முறிவு ஏற்பட்டது.

இருந்தபோதிலும் அவர் தொடர்ந்து இளம்பெண்ணிடம் மீண்டும் காதலிக்கும்படி தொந்தரவு செய்து வந்தார். இதற்கு அந்த பெண் ஒப்புக்கொள்ளவில்லை.

இதனால் ஆத்திரம் அடைந்த கார்த்திக் கடந்த மே மாதம் 24—ந்தேதி மாலை நண்பர்கள் 3 பேருடன் 2 மோட்டார் சைக்கிள்களில் இளம்பெண் வீட்டிற்கு வந்தார்.

பின்னர் பெட்ரோல் நிரப்பிய காலி பீர்பாட்டில்களை வீட்டின் மீது

கோவை கலிக்கநாயக்கன்பாளையத்தில் இளம்பெண்ணை மிரட்டிவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பி செல்லும் ரவுடி கார்த்திக்கை படத்தில் காணலாம்,

வீசியதுடன், வெளியில் நின்றிருந்த இளம்பெண்ணின் தந்தையை அவதூறாக பேசி கொலை மிரட்டல் விடுத்து தப்பி சென்றார்.

தனிப்படை விசாரணை

ரவுடி கார்த்திக் வீசிய பெட்ரோல் குண்டு வெடித்து வீட்டின் முன்புற பகுதியில் இருந்த செருப்பு ஸ்டாண்ட் தீப்பிடித்து எரிந்து சேதம் அடைந்தது. ஆனாலும் இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதுகுறித்து அந்த இளம்பெண்ணின் தந்தை கொடுத்த புகாரின் பேரில் தொண்டாமுத்தூர் போலீசார் குற்றசம்பவத்தில் ஈடுபட்டதாக 4 பேர் மீது வழக்குப்பதிவுசெய்து விசாரணை நடத்தினர். மேலும் சம்பவம் நடந்த பகுதியில் பொருத்தப்பட்டு உள்ள சி.சி.டி.வி. காமிரா காட்சிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இதற்கிடையே கோவை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பவன்குமார்ரெட்டி உத்தரவின்பேரில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடக்கிறது. ஆனால் சம்பவம் நடந்து 50 நாட்களை தாண்டியும் இந்த சம்பவத்தில் தொடர்பு உடைய குற்றவாளிகள் போலீசில் சிக்கவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட இளம்பெண்ணின் குடும்பத்தினர் பீதியில் உள்ளனர்.

பொதுமக்கள் அச்சம்

இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில், சம்பவம் நடந்து 50 நாட்களை தாண்டியும் தனிப்படை போலீசார் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்யவில்லை.

இதனால் எங்கள் பகுதியில் வசிக்கும் இளம்பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. குற்றவாளிகள் எந்த நேரத்திலும் மீண்டும் தாக்குதல் நடத்த வரலாம் என்ற அச்சத்துடன் தவித்து வருகிறோம். எனவே போலீசார் இந்த வழக்கில் தொடர்பு உடைய 4 பேரையும் கைது செய்து பொதுமக்களின் அச்சத்தை போக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.

மீண்டும் அட்டகாசம்

இந்த நிலையில் கடந்த 2 மாதங்களாக போலீசாரின் கண்ணில் படாமல் தலைமறைவாக இருந்த ரவுடி கார்த்திக், நேற்று மாலை மீண்டும் கூட்டாளி ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் கலிக்கநாயக்கன்பாளையம் பகுதிக்கு வந்தான்.

அந்த நேரத்தில் இளம்பெண் கல்லூரி முடிந்து பஸ்சில் இருந்து இறங்கிவீடுதிரும்பிகொண்டு இருந்தார். அப்போது அவரை ரவுடி கார்த்திக் பின்தொடர்ந்து வந்து உள்ளான்.

இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த இளம்பெண் பயத்தில் அலறியபடி அருகில் இருந்த ஒரு வீட்டிற்குள் புகுந்து கதவை சாத்திக்கொண்டார். மேலும் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று கூச்சலிட்டார்.

இளம்பெண்ணின் சத்தத்தை கேட்ட பொதுமக்கள் உடனடியாக திரண்டு வந்தனர்.

பின்னர் அவர்கள் இதுகுறித்து கல்லூரி மாணவியின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்தனர். தொடர்ந்து அவர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அதற்குள் ரவுடி கார்த்திக் கூட்டாளியுடன் வாகனத்தில் தப்பி சென்றுவிட்டான்.

இணையத்தில் வீடியோ வைரல்

இதுகுறித்து தகவலறிந்த தனிப்படை போலீசார் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

மேலும் அந்த பகுதியில் பொருத்தப்பட்டு உள்ள சி.சி.டி.வி. காமிராக்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதில் ரவுடி கார்த்திக் மோட்டார் சைக்கிளில் தப்பி செல்லும் காட்சிப்பதிவுகள் இடம்பெற்று இருந்தன.

இந்த காட்சிகள் தற்போது இணையத்தில் வைரலாக பரவி வருகின்றன.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், கலிக்கநாயக்கன்பாளையம் குண்டுவீச்சு வழக்கில் தொடர்புடைய குற்றவாளி கார்த்திக் மீண்டும் எந்தவித பயமும் இன்றி இளம்பெண் வசிக்கும் தெருவுக்கு பின் தொடர்ந்து வந்து உள்ளான்.

தமிழகம் முழுவதும் 31 வழக்குகள் நிலுவையில் உள்ள ஒரு ரவுடியை கோவை போலீசார் பிடிக்க முடியாமல் கடந்த 2 மாதங்களாக திணறுவது காவல்துறை மீதான நம்பகத்தன்மையை கேள்விக்கு உட்படுத்தி உள்ளதாக குற்றம் சாட்டி வருகின்றனர்.